ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

30.01.2025

1. அறம் போற்றி உலகோர் தேறிட
ஆசானாய் அரங்கன் யானும்
வரம் தந்து கலியிடரை வென்றிட
வழிகாட்டி குருவார அருளாசிதனை

2. தன்னையே குரோதி கலை திங்கள்
தக்க சூலவாம் குருவார ஆசியாக
என் மக்கள் நலம்பெற உரைப்பேன்
என் வழி ஞானிகள் பூசைவழி முறையாக

3. ஆகவே அன்னதான சக்தி நிரம்பி
ஆற்றலாக தனிவழியாக இருக்க
செகத்தினர் எல்லாம் ஏற்று
செப்பிடுவேன் பிரணவக் குடில் எனும்

4. குடிலெனும் தரும ஞான சபையை
குறைவின்றி அணுகி வருக
நாடிய அக்கணமே உலகோர்க்கு
நல்லது நடக்கும் என்பேன்

5. என்பால் நன்மை தா என
எண்ணற்ற வேண்டல் தன்னை
அன்புடன் அணுகி வேண்டி
அரங்கா உன்னை சரணடைந்தேன் என

6. என சரணாகதி கொண்டிட
எல்லோர்க்கும் என் ஆசி பலம்
தானாக வந்தடைந்து மாற்றம்
தடையற சித்திகள் ஆகுமப்பா

7. அப்பனே அன்னதான சேவை வழி
அடியேனும் பங்களிக்கிறேனென
ஒப்பு கொண்டு எவரின் கரமதும்
ஓங்காரக் குடிலில் தருமம் தருகின்றதோ

8. அதே கணம் அவர்கட்கு மாற்றம்
அரங்கன் சூட்சும வடிவில்
இதோ வந்தேன் என அணுகி
எல்லா வளமும் தந்திடுவேன் அப்பா

9. அப்பனே தயவு குணம் நிரம்ப
ஆசான் எனை அழைக்க
காப்பாக வருவேன் உங்களுக்கு
கருமவினைதனை வென்றும் மீட்பேன்

10. மீட்பேன் ஞானவான்களாக
மீட்பேன் தருமவான்களாக
ஆட்கொண்டு உங்களில் யான்
ஆசி தந்து கலந்து அருள

11. அருளவே அனுதினமும் பூசை
அரங்கா முருகா எனச் செய்து
தருமமிட்டு வந்தால் போதும்
தஞ்சமடைந்து உங்களுள் இருப்பேன்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி